அக்கரைப்பற்று பிரதேச சபை

அம்பாறை மாவட்டம்

---

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 11 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 24 இல் சபையின் தவிசாளருற்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அக்கரைப்பற்று பிரதேசசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 8250 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மின்சாரக்கட்டணம், நீர் கட்டணம் மற்றும் தொலைபேசிக் கட்டணம் என்பவற்றிற்கு மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா.16,500 கூட்டுமொத்த தொகைக்கு கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) குத்தகைக்காரர்களிடமிருந்து அறவிடப்பட்ட இறைச்சிக்கடை குத்தகை வருமானம் ரூபா 583,000 தொகை வருமானக் கணக்கிற்கு மாற்றப்படாமல் வைப்புக்கணக்கில் பதியப்பட்டிருந்தது.

1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

2010 ஆம் ஆண்டில் அலுவலகத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற மூன்று உத்தியோகத்தினரதும் கடன் நிலுவை ரூபா 4,500 தொகையை மாற்றலாகிச் சென்ற நிறுவனத்திடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள் மற்றும் விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிதி நிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாகரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடம் பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் X இன் பிரிவு 191 | மீளாய்வாண்டில் பதின்மூன்று சபைக் கூட்டங்கள் நடைபெற்றிருந்த போதிலும், அக்கூட்ட அறிக்கைகளின் உறுதிப் படுத்திய பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் X இன் பிரிவு 193 | மீளாய்வாண்டுக்கான வருமானம் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண் பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

2. நிதிமீளாய்வு

2.1 நிதிவிளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி 2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 472,393 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 4,427,133 ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா 3,954,741 பின்னடைவைக் காட்டுகின்றது.

## 2.2 வருமான முகாமைத்துவம்

### 2.2.1 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 வரை கிடைக்க வேண்டிய ரூபா.500,000 தொகையான நீதிமன்ற தண்டப் பணத்தினை கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்தது.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா.4,100,000 தெகையை பதிவாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்தது.

### 2.2.2 ஏனைய வருமானம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்கமைய சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளை சட்டமாக்கத் தவறியதன்காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 04 விளம்பரப் பதாதைகளுக்காகவும் தொலைத்தொடர்பு நிறுவனங்களால் நிறுவப்பட்ட 02 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காகவும் மீளாய்வாண்டிற்காக அறவிடவேண்டிய அண்ணளவாக ரூபா.60,000 தொகையான வருமானத்தை சபை இழக்கவேண்டி ஏற்பட்டது.

(ஆ) 2012 முதல் 2012 ஆம் ஆண்டுவரையான காலத்திற்கு இறைச்சிக்கடை குத்தகை நிலுவைத் தொகை ரூபா 21,301 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு இறுதிவரை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட்ட பெறுமதி சேர்வரி ரூபா.40,716 தொகையை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு 2014 யூன் 15 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்.

---

4.1 உள்ளகக் கணக்காய்வு

---

ஓவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கிகொள்ளவேண்டுமென மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீராமைப்புச் சுற்றறிக்கையின் 8ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்டதற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டி ருக்கவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கீழ்வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேடகவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) வருமானச் சேகரிப்பு